OS 365/2018

வா.சா.1 அம்பிகா அம்மாள் க/பெ முருகன்

நாள் 28.07.2026

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு 2 மகன்கள், 1 மகள் ஆவார்கள். எனது மகள் பெரியவள் அவருக்கு 45 வயது இருக்கும். என்னை வடமாதிமங்கலத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். தற்போதும் வடமாதிமங்கலத்தில் தான் இருக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு என்ன சொத்திற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் வீடு சொத்திற்காக தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்து கொளத்தூரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் சொல்லியிருப்பது போல் தாவா சொத்தின் பழைய சர்வே எண்.229 என்றால் சரிதான். அதன் புதிய சர்வே எண்.419/11 என்றால் சரிதான். எனது தாயாருக்கு உயில் மூலம் சொத்து வந்ததாக சொல்லியிருக்கிறேன் அந்த அசல் உயில் ஆவணம் யாரிடம் இருக்கிறது என்றால் என்னிடம் தான் இருக்கிறது. அந்த அசல் உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேனா என்றால் செய்கிறேன். எனது தாத்தா யார் யாருக்கு உயில் மூலம் சொத்து எழுதியிருக்கிறார் என்றால் எனது பெரியம்மா குப்பம்மாள், எனது தாயார் கங்கம்மாள் ஆகிய இருவருக்கும் எழுதியிருக்கிறார்.

2. உயிலில் 2 பேருக்கு மட்டும் தான் சொத்து எழுதியிருப்பதாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். எனது பெரியம்மாவிற்கு நிலம் ஒதுக்கப்பட்டது, எனது அம்மாவிற்கு வீடு ஒதுக்கப்பட்டது. எனது தகப்பனார் பெயர் விநாயகம் ஆகும். எனது தகப்பனாருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் 2வது மனைவி சின்னம்மா மகாராஷ்டிரா மாநிலத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் 2வது மனைவி சின்னம்மாவிற்கு பரசுராமன், ஜெயராமன், அம்சா ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். எனது அப்பா கடைசி காலத்தில் மகாராஷ்டிராவிற்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான் ஆனால் அவர் காலமானது கொளத்தூரில். அவர் மகாராஷ்டிராவில் இறந்துவிட்டார் என்றாலும் மகாராஷ்டிராவில் தான் அடக்கம் செய்தார்கள் என்றாலும் சரிதான். வழக்கில் தாக்கல் செய்துள்ள எனது தகப்பனாரின் இறப்பு சான்று வா.சா.ஆ.6 பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. எனது தாயார் எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3. வழக்கில் எனது அப்பா முதலில் இறந்ததாகவும், எனது தாயார் அதன் பிறகு இறந்ததாகவும் விவரம் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம் தவறு தான் என் தாயார் தான் முதலில் இறந்தார். எனது தாயார் இறந்தபிறகு தான் எனது தாய் வழி பாட்டி சின்னத்தாய் அம்மாள் இறந்தார் என்றால் சரிதான். எனது அப்பாவும், அம்மாவும் தாவா சொத்தை அனுபவித்து வந்ததாக வழக்கிற்காக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தாவும் பாட்டியும் தாவா சொத்தை அனுபவித்து வந்தனர் என்றும் அவர்களுக்கு பின்னிட்டு எனது தாயார் அனுபவித்து வந்ததாக வழக்கில் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் நான் அது போன்று சொல்லவில்லை. வழக்கில் மேலே சொன்னவாறு கூறிவிட்டு தற்போது இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 உயிலில் வழக்கு சொத்து எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. உயிலில் என் தாயாருக்கு என்ன சர்வே எண் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது.

4. எனது தாத்தா அம்பளவான முதலியார் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா பெயரிலும், எனது அம்மா பெயரிலும் தாவா சொத்திற்கு பட்டா ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு போடும் வரை தாவா சொத்து யாருக்கு சொந்தம் என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம் தெரியாது. தாவா சொத்து கூரை வீடு இருந்ததற்கான எனது தாத்தா பெயரிலோ எனது அம்மா பெயரிலோ எனது அப்பா பெயரிலோ வரி ரசீது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என் பெயரில் தாவா சொத்திற்கான வரி ரசீது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. ரொம்ப காலமாக எனது சித்தப்பா மகன் கன்னியப்பன் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு 20 வருடங்களாக மின்சாரம் இருக்குமா என்றால் இருக்கும். மின்சாரமும் கன்னியப்பன் தான் வாங்கினார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான மின்கட்டணம் மற்றும் வீட்டு வரி ஆகியவற்றை கன்னியப்பன் தான் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். கங்கம்மாளுக்கு நானும் எனது அக்கா கன்னியம்மாளும் வாரிசுகள். கன்னியம்மாள் இறந்துவிட்டார் அவருக்கு ஒரு மகன், ஒரு மகள் இருக்கிறார்கள்.

5. கன்னியம்மாள் தாவா சொத்தில் அவருக்குரிய உரிமையை எனக்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு விட்டு கொடுத்துவிட்டார். எனது அக்கா கன்னியம்மாளிடம் அதற்கான ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. ஓலை குடிசையை ஓட்டுவீடாக கன்னியப்பன் தான் மாற்றினார் என்றால் சரிதான். கன்னியப்பன் 2012ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கன்னியப்பனுக்கு 4 மகள்கள், 2 மகன்கள் மற்றும் அவரின் மனைவி ராஜம்மாள் ஆகியோர் வாரிசுகள் என்றால் 3 மகள்கள் மற்றும் 1 மகன் மட்டும். வழக்கு சொத்திற்கு சொல்லப்பட்டுள்ள ஐக்குபந்தியை காட்டுவதற்கு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் கன்னியப்பன் மகன் கார்த்திகேயன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு மேற்கே கிருஷ்ண முதலியார் மருமகன் சந்திரா வீடு என்றால் சரிதான். அதற்கு மேற்கே குமாரசாமி மகன் பழனி வீடு என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கிழக்கில் சுப்பிரமணியின் வீடும் காலி இடமும் உள்ளது என்றால் சரிதான். அதற்கு கிழக்கே அப்பாசாமி மகன் ஏழுமலை வீடு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கன்னியப்பன் பெயரில் பட்டா வழங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

6. எப்போது தெரியவந்தது என்றால் வீடு கட்டும் போது தெரியவந்தது. வட்டாட்சியரிடம் ஆட்சேபனை மனு கொடுத்தேனா என்றால் இல்லை. கன்னியப்பன் பெயரில் பட்டா வழங்கிய விவரம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அளவுகள் சொல்லமுடியுமா என்றால் கிழக்கு மேற்காக 61/2 கஜம், வடக்கு தெற்காக 43கஜம் ஆகும். எனது அம்மாவின் இறப்பு சான்று, வாரிசு சான்று மற்றும் எனது அப்பாவின் இறப்பு சான்று வழக்கு தாக்கல் செய்த பிறகு வாங்கி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து கன்னியப்பனுக்கு வழங்கிய பட்டா தவறு என்று வழக்கில் எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை சேர்க்கவில்லை என்றால் சரிதான். கோபால் முதலியார் என்பவர் யார் என்றால் அவர் எனது மாமா ஆவார். அசல் உயில் ஆவணம் கோபால் முதலியாரிடம் இருப்பதாக முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது தவறானது என்றால் நான் சொல்லவில்லை.

7. என் அக்கா கன்னியம்மாளின் வாரிசுகள் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது அக்கா கன்னியம்மாளின் வாரிசுகளிடம் இருந்து இந்த வழக்கை தாக்கல் செய்ய அதிகாரம் பெற்று தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.8 பாகப்பிரிவினை பத்திரத்தில் சூரப்ப முதலியார் வகையறா எந்த சொத்து குறித்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றோ அதில் என் தகப்பனாரின் சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றோ குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மற்றும் 10 கிரைய ஆவணங்களில் எந்த சொத்து கிரையம் கொடுக்கப்பட்டது என்றோ அதில் என் தகப்பனாரின் சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றோ குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 8 முதல் 10 ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாதவை என்றால் சரிதான். கன்னியப்பன் அனுபவம் செய்து வந்ததை நானோ எனது வாரிசுகளோ ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 8 முதல் 10 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள ஜக்குபந்திகளுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

8. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தவிர வழக்கு சொத்து எனக்கு உரிமையானது என்பதற்கு வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். கன்னியப்பன் இறந்த பிறகு பிரதிவாதி தான் தாவா சொத்திற்கு வீட்டு வரி, மின்கட்டண வரி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். உயிலில் உள்ள சாட்சிகளை விசாரிக்க இருக்கிறேனா என்றால் விசாரிக்கிறேன். கன்னியப்பனுக்கு வழக்கு சொத்தை தவிர வேறு வீடு இருக்கிறது என்றால் சரிதான். கன்னியப்பன் இறந்த பிறகு அவரது வாரிசுகள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து பாகப்பிரிவினையில் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 சின்னத்தாய் அம்மாளின் வாரிசு சான்று எனது பெரியம்மாள் குப்பம்மா பெயர் இல்லை என்றால் அது எப்படி இல்லாமல் போயிடும். வா.சா.ஆ.4 வாரிசு சான்று உண்மை விவரம் குறிப்பிடாமல் சரியான வாரிசு குறிப்பிடாமல் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் உள்ள சொத்துகளுக்கும் வழக்கு சொத்துக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. உயில் மூலம் தாவா சொத்தை நான் பொய்யாக உரிமை கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9. உயில் உண்மையான ஆவணமாக இருந்தால் தாவா சொத்து எனது தாயார் பெயரில் பட்டா ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு, எனது தகப்பனாருக்கு எனக்கோ தாவா சொத்தில் உரிமை இல்லை என்பதால் தான் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. உரிமையில்லாத சொத்து என்பதால் தான் தாவா சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டி எடுத்த நடவடிக்கைக்கு எனது சகோதரி ஒத்துழைக்கவில்லை என்பதால் தான் அவர் எனக்கு விட்டு கொடுத்துவிட்டதாக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து கங்கம்மாளுக்கு உரிமையாக இருந்தால் எனது அக்காவின் வாரிசுகளை வழக்கில் சேர்த்திருப்பேன் என்றாலும் நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.